

கழக முப்பெரும் விழாவையொட்டி அண்ணா அறிவாலய முகப்பில் உள்ள பேரறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவச் சிலைகள் உட்பட அண்ணா அறிவாலயம் வண்ண விளக்குகளால் ஜொலிக்கும் காட்சி!



கழக முப்பெரும் விழா – பவள விழாவையொட்டி இராயபுரம் அறிவகம் வண்ணத் தோரண ஒளியில் மிளிரும் காட்சி!



தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர் சு.திருநாவுக்கரசரின் மகன் சாய் விஷ்ணு மேகா ஆகாஷ் இணையரின் திருமண வரவேற்பு விழாவில் இளைஞர் நலன் – விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தினார். இதில் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# செப்டம்பர் 15 பொறியாளர்கள் தினத்தை முன்னிட்டு - பொன்குமார் வாழ்த்து!



சென்னை, செப்.15-

தமிழ்நாடு விவசாயிகள், தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை வருமாறு :-

செப்டம்பர் 15 ஆம் நாளை கட்டுமானப் பொறியாளர்கள் தினமாக அறிவிக்கப்பட்டு கொண்டாடப்பட்டு வருவது அறிந்ததே. இந்த நாளில் கட்டுமானத் தொழிலில் ஈடுபடக்கூடிய லட்சக்கணக்கானப் பொறியாளர்களுக்கு உள்ளார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

கட்டுமானத் தொழில் என்பது ஒரு நாட்டின் கட்டமைப்பு பணிகளை மேற்கொள்ளக்கூடிய முக்கிய தொழிலாகும். எந்த நாட்டில் கட்டமைப்பு பணிகள் சிறப்பாக இருக்கிறதோ அந்த நாட்டில் தொழில் தொடங்கி, வேலைவாய்ப்பு பெருகி, பொருளாதாரம் வளர்ச்சி பெறும். அப்படிப்பட்ட மிக முக்கிய பணியாற்றக் கூடியவர்கள் இந்த கட்டுமானப் பொறியாளர்கள் ஆவர். கட்டுமானப் பொறியாளர்களின் இப்படிப்பட்ட சிறந்த பணிகளை இந்த நேரத்தில் அனைவரும் நினைவு கூர்ந்து பாராட்டப்பட வேண்டும். துறைமுகங்கள், விமான நிலையங்கள், ரயில்வே பாதைகள், மேம்பாலங்கள், சாலைகள், அணைகள் என வளர்ச்சி பணிகளை மேற்கொள்ளக்கூடிய கட்டுமானங்களை வடிவமைத்து செய்து முடிக்க கூடிய ஆற்றலுக்கு சொந்தக்காரர்கள் கட்டுமானப் பொறியாளர்கள் ஆவர். அவர்களை நினைவு கூறும் வகையில் திரு.விசுவேசுவராயா பிறந்தநாளான இந்த நாள் பொறியாளராக தினமாக கொண்டாடபடுகிறது.

முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான இந்த திராவிட மாடல் அரசு கட்டுமானத் துறையை ஊக்கப்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருவதை இந்த நாடு அறியும். கட்டுமானம் மற்றும் மனைத்தொழில் கூட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த அமைப்புகள் வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு முதலமைச்சர் மற்றும் துறை சார்ந்த அமைச்சர்களை சந்தித்து அரசின் கவனத்திற்கு கொண்டு வந்து இன்றைக்கு பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட்டு அதற்கான அறிவிப்புகளும், ஆணைகளும் வெளியிடப்பட்டு வருவதை துறை சார்ந்த அனைவரும் அறிவர். இது இந்த தொழிலை மேலும் வளர்ச்சி அடைய செய்யும். அதன் மூலம் தொழில் சார்ந்த அனைவரும் குறிப்பாக கட்டுமானப் பொறியாளர்களும் பயன் பெருவர்.

கட்டுமானப் பொறியாளர்களுக்கு ஒரு பொறியாளர் கவுன்சில் அமைத்திட வேண்டும் என்பது அவர்களது நீண்ட கால கோரிக்கையாகும். வழக்கறிஞர்களுக்கு பார் கவுன்சில் இருப்பதைப் போல் ஆர்க்கிடெக்கிற்கு ஒரு கவுன்சில் இருப்பது போன்று கட்டுமானப் பொறியாளர்கள் தங்கள் தொழிலை வரைமுறைப்படுத்திக் கொள்ள புதிய தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ளும் வகையில் பொறியாளர்களுக்கான ஒரு கவுன்சில் அமைப்பது அவசியமாகிறது. இந்த நீண்ட நெடிய நாள் கோரிக்கையை இன்றைய அரசும் முதலமைச்சரும் கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டிருப்பது நமக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும். இந்த துறையின் அமைச்சர் எ.வ.வேலு அவர்களுக்கு நாம் கொடுத்த அழுத்தத்தின் காரணமாக அவர் பொறியாளர் கவுன்சில் அமைப்பது சம்பந்தமான விரிவான அறிக்கையை துறையிடம் கேட்டிருப்பது இந்த பணியின் அடுத்த கட்ட முன்னேற்றமாகும். எப்படியும் இந்த ஆண்டு இறுதிக்குள் பொறியாளர் கவுன்சிலை இந்த அரசு அமைத்து கொடுத்து விடும் என்கிற அசைக்க முடியாத நம்பிக்கை நமக்கு இருக்கிறது. தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கையோடு பொறியாளர்கள் தினத்தை மகிழ்ச்சியோடு கொண்டாடுவோம். அனைத்து பொறியாளர்களுக்கும் மீண்டும் என்னுடைய நல்வாழ்த்துக்கள்.

இவ்வாறு பொன்குமார் தெரிவித்துள்ளார்.

### மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுராசெந்தில் தலைமையில் - நாமக்கல் மேற்கு மாவட்டம்

# பரமத்தி வேலூரில் 60 அடி பவளவிழா கொடிக் கம்பம்- புதிய கட்டிடம்!

### அந்தியூர் ப.செல்வராஜ் எம்.பி. - அமைச்சர்கள் அன்பில் மகேஷ்பொய்யாமொழி - மா.மதிவேந்தன் பங்கேற்பு!

நாமக்கல், செப். 15 -

நாமக்கல் மேற்கு மாவட்டம் பரமத்திவேலூர் தொகுதி புதிய கட்டிட அலுவலகம் கலைஞர் அரங்கம் திறப்பு விழா 12.9.2024 அன்று காலை 10.00 மணியளவில் கழக பவள விழா ஆண்டை முன்னிட்டு வேலூரில் 60 அடி நினைவு கொடிக்கம்பத்தில் கழக இருவண்ணக்கொடியை கழக துணை பொதுச்செயலாளர் அந்தியூர் பி.செல்வராஜ் ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார்.

மேலும் அன்று காலை 10.30 மணிக்கு பரமத்திவேலூர் தொகுதி புதிய கட்டிட அலுவலகம் கலைஞர் அரங்கம், இசேவை மையம், கலைஞர் படிப்பகம் மற்றும் புதிய பொது உறுப்பினருக்கான அட்டை வழங்கும் விழா மாவட்டக் கழக செயலாளர் எஸ்.எம்.மதுராசெந்தில் தலைமையில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் திறந்து வைத்து சிறப்புரையாற்றினர்.

கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா , மாநில இளைஞர் அணி துணை செயலாளர் பி.எஸ்.சீனிவாசன் , மற்றும் மாநில மகளிர் தொண்டர் அணி துணை செயலாளர் ஜே.ரேகா பிரியதர்ஷினி, மாநில மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் திருமதி. ரியா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பரமத்தி ஒன்றிய கழக செயலாளர் பி.பி.தனராசு, வேலூர் பேரூர் கழக செயலாளர் பி.முருகன் வரவேற்புரை மற்றும் நன்றியுரையாற்றினர்.

இந்நிகழ்வுகளில் மாவட்ட துணை செயலாளர் வி.ஜி.அன்பழகன், திருமதி.எம்.சாந்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ரங்கசாமி, பொதுக்குழு உறுப்பினர் பி.பி.சாமிநாதன், திரு.பி.சிவக்குமார், எலச்சிபாளையம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் திரு.எம்.தங்கவேல், கபிலர்மலை ஒன்றிய கழக செயலாளர் .கே.கே.சண்முகம், மோகனூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.பி.ஆர். சண்முகம், பொத்தனூர் பேரூர் கழக செயலாளர் ஆர்.கருணாநிதி, பரமத்தி பேரூர் கழக செயலாளர் .மு.ரமேஷ்பாபு, வெங்கரை பேரூர் கழக செயலாளர் . எம்.ராமலிங்கம், பாண்டமங்கலம் பேரூர் கழக செயலாளர் பி.முருகவேல், திருச்செங்கோடு மற்றும் குமாரபாளையம் சட்டமன்ற தொகுதி ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பேரூராட்சி தலைவர்கள் சோமசேகர், மணி, திருமதி.லட்சுமி, வார்டு, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சிமன்ற பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள், பாக முகவர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சென்னை வடகிழக்கு மாவட்ட

# பகுதி - ஒன்றிய - பேரூர் மாணவர் அணி நேர்காணல்!

### மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் அறிவிப்பு!

சென்னை, செப். 15 -

சென்னை வடகிழக்கு மாவட்ட பகுதி ஒன்றிய பேரூர் மாணவர் அணி நேர்காணல் மாவட்ட செயலாளர் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையிலும் மாநில மாணவர் அணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. மற்றும் மாநில மாணவரணி துணை செயலாளர் மன்னை சோழராஜன் மற்றும் மாநில மாணவரணி இணை செயலாளர் எஸ்.மோகன் ஆகியோர் முன்னிலையில் நாளை (16-09-2024) மாலை 4.00 மணியளவில் மாதவரம் வி.ஆர்.டி. நகரில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

எனவே பகுதி ஒன்றியம் பேரூர் மாணவர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர் பொறுப்புக்கு விண்ணப்பித்துள்ள அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் தெரிவித்துள்ளார்.

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் மாலை அணிவிக்கிறார்!

# குன்றத்தூர் நகரத்தில் அண்ணா சிலைக்கு மரியாதை!

### நகரச் செயலாளர் கோ. சத்தியமூர்த்தி வேண்டுகோள்!

காஞ்சிபுரம், செப்.15-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் குன்றத்தூர் நகரம் நகரக் கழக செயலாளர் கோ.சத்தியமூர்த்தி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

பேரறிஞர் அண்ணா 116வது பிறந்தநாளை முன்னிட்டு இன்று (15.9.2024) காலை 8.30 மணி அளவில் பேருந்து நிலையம் அருகில் கழக கொடியினை ஏற்றி அண்ணா சிலைக்கு மாவட்டச்செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

கழக நிர்வாகிகள், நகர, வார்டு செயலாளர்கள், நகர மன்றஉறுப்பினர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, அனைத்து அணிகளின் நிர்வாகிகளும் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

இவ்வாறு குன்றத்தூர் நகரக் கழக செயலாளர் கோ. சத்தியமூர்த்தி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் - குன்றத்தூர் வடக்கு ஒன்றியத்தில்

# பேரறிஞர் அண்ணா 116 வது பிறந்த நாள் விழா!

### ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ.வந்தேமாதரம் அறிக்கை!

காஞ்சிபுரம், செப். 15 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் குன்றத்தூர் வடக்கு ஒன்றியத்தில் இன்று (15.9.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 8 மணிக்கு எல்லாம் நம்மையெல்லாம் ஆளாக்கிய தென்னாட்டு காந்தி, இந்நாட்டு இங்கர்சால், அறிவுலகமேதை பேரறிஞர் அண்ணா அவர்களின் 116வது பிறந்த தின விழாவை முன்னிட்டு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆணைக்கிணங்க குன்றத்தூர் வடக்கு ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகளில் ஒன்றிய கழகத்தால் கீழே அறிவிக்கப்பட்டுள்ள கழக முன்னோடிகள் வைத்து கிளைகள் தோறும் கழக கொடி ஏற்றி இனிப்பு அன்னதானம் ஏழைகளுக்கு நலத்திட்ட உதவிகள் மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல் போன்ற நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து ஒலி பெருக்கி அமைத்து கழக கொள்கை பாடல்களை முழங்கச் செய்து பேரறிஞர் அண்ணாவின் அவர்களின் திருவுருவப் படத்தினை கழகக் கொடி கம்பத்தின் கீழ் வைத்து மலர்மாலை அணிவித்தும் கழக பவள விழாவை முன்னிட்டு அனைத்து இல்லங்களிலும் கழகக் கொடியை ஏற்றி பிறந்தநாள் விழாவை எவ்வித காரணத்தைக் கொண்டும் தடைபடாமல் எழுச்சியோடு நடத்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சிகளில் கழக கொடியேற்றும் கழக முன்னோடிகள் விவரம். அயப்பன்தாங்கல் ஊராட்சி ஆர். துரைபாபு, பரணி புத்தூர் ஊராட்சி கே. தங்கராஜ், மௌலிவாக்கம் ஊராட்சி ஆ.முருகன், கொளப்பாக்கம் ஊராட்சி வி.கேசவேல், கெருகம்பாக்கம் ஊராட்சி ப.குமரவேல், பெரியப்பணிச்சேரி ஊராட்சி சி. மோகன், கோவூர் ஊராட்சி கை.சண்முகசுந்தரம், தண்டலம் ஊராட்சி சே.கனகராஜ், தரப்பாக்கம் ஊராட்சி ஜெ.எத்திராஜ், இரண்டாங்கட்டளை ஊராட்சி வி.தேசன் ஆகிய கழக முன்னோடிகளின் தலைமையில் அந்தந்த ஊராட்சியில் அடங்கிய கிளைக் கழகங்களில் சிறப்பான முறையில் கழக கொடியேற்றி நிகழ்ச்சியை சிறப்பான முறையில் நடத்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - எஸ்.முரளி பங்கேற்பு!

# 124வது வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### வட்டச் செயலாளர் ஏ.தாஸ் அறிக்கை!

சென்னை, செப் 15-

சென்னை தென் மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி 124வது வட்டத்தில் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (15.09.2024 - ஞாயிற்றுக்கிழமை) மதியம் 12 மணியளவில் முண்டககண்ணகியம்மன் கோவில் தெருவில் உள்ள வாழைத்தோப்பு விளையாட்டு மைதானத்தில் வட்ட அவை தலைவர் எஸ். கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெறுகிறது.

மாவட்ட பிரதிநிதி பயனீர்.எஸ்.ராஜீ, முன்னாள் மாவட்ட பிரதிநிதி கே.பலராமன் , இலக்கிய அணி மாவட்ட துணை அமைப்பாளர் கே.பாலகிருஷ்ணன் இளைஞர் அணி ப.து.அ.தா. தீபன், 124 வது வட்ட கழக நிர்வாகிகள் எஸ்.பூபாலன், ஆர்.லோகநாதன் , பி.பரமேஸ்வரி, கே.சி.ஜெயகுமார், சி.ராமநாதன், எஸ். வெங்கடேசன், கே.டில்லி, என்.வேலு, டி.ஆறுமுகம் மற்றும் பகுதிக்கு கழக நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகம், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அனைவரும் வரவேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக தென் மேற்கு மாவட்ட செயலாளரும் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. மற்றும் மயிலை கிழக்கு பகுதி எஸ். முரளி மாமன்ற உறுப்பினர் விமலா கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

ஆகவே வட்டத்திற்கு உட்பட்ட பி.எல்.ஏ.2 மற்றும் பி.எல்.சி. கழக மூத்த முன்னோடிகள், கழக உறுப்பினர்கள், கழக செயல்வீரர்கள் அனைவரும் தவறாமல் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறேன்.

இவ்வாறு 124வது வட்ட செயலாளர் ஏ.தாஸ் அறிக்கை விடுத்துள்ளார்.

### பகுதிச் செயலாளர் சொ.வேலு முன்னிலையில்

# 78வது வட்டத்தில் கழக முப்பெரும் விழா!

### சு.மனோகர் தலைமையில் கழகத்தினர் பங்கேற்பு!

சென்னை, செப் 15-

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்கு பகுதி,78வது வட்டத்தில் முப்பெரும் விழா நடைபெறுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் மு.க. ஸ்டாலின், கழக இளைஞரணி செயலாளர், விளையாட்டு மேம்பாட்டுதுறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆணைப்படி இந்து சமய அறநிலைதுறை அமைச்சர், பெருநகர சென்னை வளர்ச்சிகுழும தலைவர்,சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் .கே. சேகர்பாபு அறிவுறுத்தலின் படி. எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர், நியமன குழு உறுப்பினர் சொ.வேலு எம்.சி, முன்னிலையில். 78வது வட்ட கழக செயலாளர் சு.மனோகர் தலைமையில் இன்று (15.09.2024 - ஞாயிற்று கிழமை) காலை 9 மணி அளவில் வட்ட கழகம்தோறும் பதினேழு (17) இடங்களில் கழக கொடியேற்றி, இனிப்பு வழங்கப்படுகிறது.

தாணா தெரு அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து, பொதுமக்களுக்கு இந்து சமய அறநிலைதுறை அமைச்சர், பெருநகர சென்னை வளர்ச்சிகுழும தலைவர்,சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி. கே.சேகர்பாபு ஆறு சுவை உணவு வழங்குகிறார்.

இதில் வட்டத்திற்குட்பட்ட மாவட்ட கழக,பகுதி கழக நிர்வாகிகள்,வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், BLA2, மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாரு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வட்ட கழக செயலாளர் சு.மனோகர் கேட்டுக் கொண்டுள்ளார்.

### ஏ.ஆர்.பி.எம். காமராஜ் ஆலோசனை வழங்குகிறார்!

# 120 (அ) வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### வட்டச் செயலாளர் என்.ரவி அறிக்கை!

சென்னை, செப்.15-

சென்னை மேற்கு மாவட்டம், திருவல்லிக்கேணி பகுதி தி.மு.க. 120(அ) வட்ட கழகம் சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (15.09.2024) மாலை 6 மணிக்கு வட்டக் கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

வட்ட செயலாளர் என். ரவி தலைமை வகிக்கிறார். திருமதி மங்கை ராஜ்குமார் எம்.சி. முன்னிலை வகிக்கிறார். இ.அன்பு, ஜி.வேலு ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

திருவல்லிக்கேணி பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ் எம்.சி. சிறப்புரையாற்றுகிறார்.

இந்தக் கூட்டத்தில் வட்ட கழக நிர்வாகிகள் சு. மோகனசுந்தரம், வி.கரிகாலன், எஸ்.ஸ்ரீகாந், டி.சத்தியவதி பி.விஜயகுமார், இரா.திராவிடமணி, கே. சுரேஷ், பி.சாந்தா, பா.சீனிவாசன் மற்றும் பாகமுகவர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடி கள் கலந்துக்கொள்கிறார்கள்.

இவ்வாறு 120 (அ) வட்ட செயலாளர் என்.ரவி தெரிவித்துள்ளார்.